

வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் கழகத்தினர், கடலூர் மஞ்ச குப்பத்தில் உள்ள அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருஉருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். இதனைத்தொடர்ந்து கழக நிர்வாகிகள் உறுதிமொழி ஏற்றனர். மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி முன்னிலை! மேயர் பிரியா ராஜன் தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் புகழரங்கம்!

### அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைக்கிறார்! திரைப்பட கலைஞர்கள் ரவி மோகன் – கருணாஸ் – நளினி – சீதா புகழுரை!

சென்னை, ஏப். 15 -

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மக்கள் முதல்வரின் மனித நேய விழா - 2025 "கதிரவனை போற்றும் நட்சத்திரங்கள், கலையாய் மின்னும் சொற்சித்திரங்கள்! எனும் தலைப்பில் மாபெரும் புகழரங்கம் இன்று (15.04.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணிக்கு, வேப்பேரி, ரித்தர்டன் ரோடு, பி.கே.என். ஆடிட்டோரியத்தில் நடைபெறுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், தலைமை செயற்குழு உறுப்பினர் பிரியா ராஜன் தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பகுதிக் கழகச் செயலாளர்கள் வி.சுதாகர், சொ.வேலு எம்.சி. மற்றும் பி.ஸ்ரீராமுலு எம்.சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம் சி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

புகழரங்க நிகழ்ச்சியினை சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி துவக்கி வைக்கிறார்.

திரைப்பட கலைஞர்கள் ரவி மோகன், கருணாஸ், நளினி, சீதா ஆகியோர் புகழுரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கலாநிதி வீராசாமி எம்.பி, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, தமிழன் பிரசன்னா, ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.எம். யாழினி, சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, பி.கே.மூர்த்தி எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ் குமார், கே.எஸ்.எம்.நாதன், பரிதி இளம் சுருதி, என்.பி. எம்.ஷேக் அப்துல்லா, வே. உமாகாந்த், ஆர்.வரதன், புலவர் சாமி நாகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி, இசட்.ஆசாத், கூ.பீ.ஜெயின் எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, ஜி.சாந்தகுமாரி எம்.சி, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ. நாகராஜன், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வே. வாசு, எஸ்.ராஜசேகர், எஸ். முரளி, டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், கோ.மணி, க.நந்தீஸ்வரன், எஸ்.பன்னீர்செல்வம், டி. வி.செம்மொழி, பி.ஜெ.துளசிங்கம், லயன் பி.உதயசங்கர், ரமேஷ் (எ) நீலகண்டன், சாவித்திரி வீரராகவன், எம். இப்ராஹிம் கனி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா, இரா.கலைச் செல்வி, த.ஜெயக்கு மார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

58 வது வட்டக் கழகச் செயலாளர் வி.விஜயகுமார், 58 (அ) வட்டக் கழகச் செயலாளர் ஆர்.பாபு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### நடுகுத்தகை கே.சுரேஷ் குமார் ஏற்பாட்டில்

# திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

திருவள்ளூர், ஏப்.15

திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் நகர செயலாளர் தி. வை.இரவி , மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் வரவேற்றார்கள் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் இரா.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, விஜெ.உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ், தெ.பிரியா குமார், முன்னிலை வகித்தார்கள் இதில் சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மாநில ஆதிதிராவிட நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள்

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் ஆவடி சாமு நாசர் இந்தியாவிலேயே பொருளாதாரத்திலும் கல்வியிலும், தொழில் வளர்ச்சியிலும், வர்த்தகத்திலும் நம்பர் ஒன் மாநிலமாக தமிழகத்தை கொண்டு வந்துள்ளார் நமது முதலமைச்சர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 தொகுதிகளில் வெற்றி பெற்றோம். எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறுவோம் என்று முதலமைச்சர் கூறியுள்ளார். அது போதாது. அதையும் மீறி 234 தொகுதிகளிலும் திமுக கூட்டணி வெற்றி பெறும். அதற்காக நாம் அனைவரும் பாடுபட வேண்டும். வருகிற 18ஆம் தேதி திருவள்ளூர் மாவட்டத்திற்கு வருகை தரும் முதலமைச்சருக்கு மிகச் சிறப்பான முறையில் வரவேற்பு அளிக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளில் நிர்வாகிகள் தீவிரமாக செயல்பட வேண்டும் அது மட்டுமல்லாமல் இளைஞர் அணி நிர்வாகிகள் பெருந்திரளாக இளைஞர்களை அழைத்து வர வேண்டும்

குறிப்பாக திமுகவில் இளைஞர் அணியில் இருந்தவர்கள் தான் இன்று பல்வேறு பொறுப்புகளில் இருக்கிறார்கள் அதே போல் நீங்கள் பல்வேறு பொறுப்பில் வர வேண்டும் என்றால் திமுகவிற்காக கட்சிப் பணிகளில் ஈடுபட வேண்டும்

திமுகவில் உழைத்தவர்களுக்கு கண்டிப்பாக பொறுப்புகள் தேடி வரும் என்று அவர் பேசினார்

இதனை தொடர்ந்து திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் உள்ள அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட 91 இளைஞர் அணி அவர்களுக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மினிட் புத்தகம் அமைச்சர் வழங்கினார்

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாவட்ட அவை தலைவர் மா ராஜ் மாவட்ட கழகத் துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், காயத்ரி ஸ்ரீதரன் மாவட்ட பொருளாளர் தொழுவூர் பா. நரேஷ் குமார் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் மாநகர ஒன்றிய நகர செயலாளர்கள் சன்.பிரகாஷ், ஆர்.ஜெயசீலன், ஜி. ஆர்.திருமலை, என்.இ.கே. மூர்த்தி, மற்றும் சி.கமலக் கண்ணன், பி.எல்.ஆர். யோகா, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ஜி. துர்கா பிரசாத், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் இளஸ்ரீதர் , எஸ்.எஸ்.முஸ்தபா அப்ரிடி, ஜி.சதீஷ்குமார் , மகா புவனேஷ், ரங்கநாதன் மகேஷ், ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக இளைஞரணி அமைப்பாளர்கள் எஸ்.சுதர்சனம், க.பரிமேலழகன்,

சு.கங்காதரன், லோ. யுவராஜ், டென்னிஸ் ராஜ், ஜோ.தினேஷ்குமார், கார்த்திக், தி.சஞ்சய், கு. பிரவீன்குமார், ரா.ராஜ், அ.முகமது ராஷிக், பா. அப்பு (எ) ஜெபராஜன், நா. சரத்குமார், தி.சதீஷ், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பட்டாணி கார்த்திக் ,இரா.ஸ்டீவாக், ஜோ.பிரசன்னா, ராஜேஷ் கண்ணன், துரையரசன், உதயா, கோபிநாத், முகுந்தன், நரேஷ் குமார் , தினேஷ், சதீஷ்குமார் , கார்த்திகேயன், யுவராஜ் ,

ராபர்ட் மோகன் குமார், சிவசூ ரியன், ரகுநாத் , நவீன் நெல்சன், மகேஷ், சுசீந்திரன், யோகேஷ் , சுனில் குமார், மணிமாறன், நிர்மல் குமார், சீனிவாசன் , தினேஷ், மு.குமார் , அன்பழகன் , வடிவேலன், ஆ.அபினேஷ் , எம்.சக்திவேல் , தியா குசுந்தர், பாலாஜி, உதயநிதி, சுதாகரன், சி. பாலாஜி, அரவிந்த் குமார் ,கௌதம் , சுரேஷ் பாபு, பாலாஜி, நேதாஜி,

ராஜ்மோகன், சூர்யா, சதீஷ்குமார், கமலஹாசன், ஞானமூர்த்தி , துரைமுருகன், பாபு , துவாரகேஷ், சதீஷ்குமார் , லிங்கேஷ்குமார், ஹரிகரன் , உதயகுமார் , மணிவண்ணன் ராஜேஷ் சிபி, கார்த்திகேயன், காரணி சத்யா, கலாநிதி, நாகராஜன் , பிரசாந்த் , நாகராஜ், சுரேஷ், சபரீஷ் , நிஜாமுதீன், தமிழ்ச்செல்வன், ஜெயசுந்தர் ,திலீப் குமார், நாராயணன் மு.சுரேஷ், நரேஷ், திவாகர் , சுதாகர் , குடியரசன், நாகராஜ் , மோகன்ராஜ் , சசிகுமார், கோபு, மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்கள்



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக மாணவர் அணி சார்பில் ஆலந்தூர் 160 வது வட்டத்தில் இலந்தோறும் மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கும் நிகழ்ச்சி மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கலாநிதி குணாளன் ஏற்பாட்டில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார். உடன் பகுதிச் செயலாளர்கள் ப. குணாளன், என்.சந்திரன் எம்.சி., பேராசிரியர் எல்.பிரபு, கோல்டு டி.பிரகாஷ், கே.பி.முரளிகிருஷ்ணன். விக்கி. ஜெகன்தேவேந்திரன், எஸ்.ஜெகதீப், மற்றும் பகுதி வட்ட மாணவரணி இளைஞர் அணி நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## ஊராட்சிக் கிளை மற்றும் நகர - பகுதி - பேரூர் வார்டு அமைப்பாளர்-துணை அமைப்பாளர்கள் தேர்வு

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்புகளுக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு, அறிமுகக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், அடுத்தகட்டமாக ஒன்றியத்தில் ஊராட்சிக் கிளைகளிலும், நகரம், பகுதி, பேரூர் வார்டுகளிலும் உள்ள இளைஞர்களை ஒருங்கிணைத்து, கழகப் பணியாற்றும் வகையில், கழகத் தலைவர் அவர்களது உத்தரவின்பேரில் தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், இந்த அமைப்புகளுக்கு இளைஞர் அணி நிர்வாகிகளை நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஊராட்சிக் கிளைகள் மற்றும் நகர வார்டுகளில் 1 அமைப்பாளர், 3 துணை அமைப்பாளர்கள் என்ற அளவிலும், பகுதி வார்டுகளில் 1 அமைப்பாளர், 5 துணை அமைப்பாளர்கள் என்ற அளவிலும், பேரூர் வார்டுகளில் 1 அமைப்பாளர், 2 துணை அமைப்பாளர்கள் என்ற அளவிலும், நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

இந்தப் பொறுப்புகளில் செயல்பட விரும்பும் இளைஞர்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிரப்பி, உரிய ஆவணங்களுடன் மாவட்டக் கழகச் செயலாளரிடமோ, மாநில துணைச் செயலாளரிடமோ, மாவட்ட அமைப்பாளரிடமோ அல்லது அன்பகத்திலோ வழங்கலாம்.

### விதிமுறைகள்

- 18 முதல் 35 வயதுடையோர் மட்டும் இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்கவும்.
- முரசொலியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை நகல் எடுத்து விண்ணப்பிக்கலாம். மாவட்டக் கழக அலுவலகம், மாவட்ட அமைப்பாளர் மற்றும் அன்பகத்திலிருந்தும் விண்ணப்ப நகலைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.
- விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தெளிவாக, முழுமையாக நிரப்பி, பாஸ்போர்ட் அளவு கலர் புகைப்படம் ஒட்டி விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பத்துடன் வாக்காளர் அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ் நகல் இணைப்பது அவசியம்.
- இதுவரை ஆற்றிய கழகப் பணிகள் குறித்த ஆவணங்கள் இருக்கும்பட்சத்தில் அவற்றின் நகல்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பலாம்.
- ஏப்ரல் 30–க்கு மேல் தாமதமாக வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- கிளை மற்றும் வார்டு பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் அதன் எல்லைக்குள் வசிப்பவர்களாக இருப்பது அவசியம்.



## தி.மு.க. இளைஞர் அணி

### கிளை, வார்டு அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் சுயவிவரப் படிவம்

கழக மாவட்டம் : ............................................

சட்டமன்றத் தொகுதி : ............................................

ஒன்றியம், ஊராட்சி, கிளை : ............................................

நகரம் / பகுதி / பேரூர், வார்டு : ...............................................................

விண்ணப்பிக்கும் பொறுப்பு : ☐ அமைப்பாளர் ☐ துணை அமைப்பாளர்

பெயர் : ...............................................................................

தந்தை பெயர் : ...............................................................................

பிறந்த தேதி : ................................ வயது....................................

கல்வித் தகுதி : ...............................................................................

தொழில் : ...............................................................................

முகவரி : ...............................................................................

...............................................................................

......................................... PIN: ..............................

வாட்ஸ்–அப் எண் : ...............................................................................

மின்னஞ்சல் முகவரி : ...............................................................................

இப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள எனது விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கின்றேன்.

நாள் : (கையொப்பம்)

குறிப்பு : 1) படிவத்தில் விவரங்களைத் தெளிவாகப் படிக்கும்விதமாக பூர்த்தி செய்ய வேண்டும்.
2) புகைப்படம், வாக்காளர் அடையாள அட்டை / ஆதார், கல்விச் சான்றிதழ் கண்டிப்பாக இணைக்க வேண்டும்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 14-04-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி